**இரத்தினபுரி பிரதேச சபை - 2023**

**-------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இரத்தினபுரி பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து இரத்தினபுரி பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 881,136 மொத்த தொகையான நூல்நிலைய புத்தகங்கள் உள்ளடங்கலாக மூலதனத் தன்மையான திருத்தச் செலவுகள் மூலதனமாக்கப்பட்டிருக்காததுடன் ரூபா 380,491 தொகையான அட்டுறு செயற்பாட்டு செலவுகளும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 09 கணக்கு விடயங்களின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறான அந்த மீதிக்குமிடையே ரூபா 384,505,389 வித்தியாசமாகும். | நீண்டகாலமாக காணப்பட்டுவரும் வித்தியாசமாகும். 2024 ஆம் ஆண்டின் போது சரிசெய்வேன். | வித்தியாசம் தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ரூபா 24,558,553 மொத்த தொகையான 10 கணக்கு விடயங்களின் விபரமான பட்டோலை மற்றும் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது இதனை சரிசெய்வேன். | கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் வழங்கப்படுதல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 371 (5) இற்கு இணங்க 2005, 2014 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 917,010 தொகையான 10 முற்பணங்கள் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணங்களை தீர்த்துத வைப்பதற்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 571 இற்கு இணங்க 2010 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய நானாவித வைப்புக்கள் ரூபா 5,839,075 தொகை தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது சரிசெய்வேன். | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 5,664,917 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 10,425,476 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்த வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரியும் வரியும் | 2,940,630 | 985,330 | 975,838 | 75,000 | 2,539,784 | 1,279,385 | 1,274,251 | 66,110 |
| வாடகை | 2,500,000 | 50,452 | 50,452 | - | 760,000 | 52,145 | 52,145 | - |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 2,240,200 | 1,176,830 | 1,176,830 | - | 1,672,200 | 1,112,750 | 1,112,750 | - |
| ஏனைய வருமானம் | 3,933,000 | 2,640,941 | 1,512,340 | - | 2,928,000 | 2,083,795 | 2,089,586 | ..........- |
| மொத்தம் | 11,613,830 | 4,853,553 | 3,715,460 | 75,000 | 7,899,984 | 4,528,075 | 4,528,732 | 66,110 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 06 அபிவிருத்தியடைந்த பிரதேசங்கள் 2014 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு இனங்காணப்பட்டிருந்தும் 2023 திசெம்பர் வரை வீதவரி அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மீண்டும் மீளாய்வினை மேற்கொண்டு 2025 ஆம் ஆண்டின் போது வீத வரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி வருமானம் சேகரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 222 பதிவுசெய்த முச்சக்கர வண்டிகளில் 178 வண்டிகள் 2023 ஆம் ஆண்டிற்கான கட்டணம் ரூபா 178,000 தொகையை செலுத்தியிருக்கவில்லை. | இந்த ஆண்டின் போது மீளாய்வினை மேற்கொண்டு அங்கத்தவர்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 63 விளம்பர பலகைகளுக்காக நிலுவையாக இருந்த ரூபா 608,500 தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தெரியப்படுத்தியமைக்கு பதில் அளிக்காத நிறுவனங்களின் விளம்பர பலகைகள் கழற்றி அகற்றப்படும். | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டம் அடைந்துகொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ‘‘-பொதுமக்கள் நூல் நிலையம்’’ நிகழ்ச்சித்திட்டத்தின் தொடக்க விழாவிற்காக 2022 மார்ச் மாத்தில் ரூபா 72,415 செலவு செய்யப்பட்டிருந்தும் அதற்குப் பின்னர் இந்நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்நிகழ்ச்சித்திட்டத்தினை முறைப்படியாக அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிகழ்ச்சித்திட்டங்களை வினைத்திறனாக அமுல்ப்படுத்ததல் வேண்டும். |

### 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பெறுகை நடைமுறைக்கு புறம்பாகவும் உடன்படிக்கை செய்துகொள்ளப்படாதும் தலைவருக்கு வாடகை அடிப்படையில் 2023 ஆம் ஆண்டின் போது ஒரு வாகனம் பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்கு எரிபொருளுக்காக ரூபா 76,950 செலவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அக்காலத்தில் அவர் சபையின் செயற்பாடுகளுக்கு பங்குபற்றியிருக்காததுடன் நீதிமன்றத்தினால் அவருக்கு எதிராக பிடிவறாந்து வழங்கப்பட்டிருந்தது. | அக்காலப்பகுதியில் சேவையில் ஈடுபட்டிருந்த அனைத்து உத்தியோகத்தர்களும் தற்பொழுது இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதனால் இது தொடர்பான விடயங்களை விசாரித்ததன் பின்னர் மேலதிக நடவடிக்கை எடுப்பேன். | சம்பவம் தொடர்பாக புலனாய்வு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஹிதெல்லன வாகனங்களை சேவை செய்யும் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக வழங்கிய அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்பட்டமைக்கு எதிராக ரூபா 70 மில்லியன் இழப்பீட்டினைக் கோரி 2014 ஆம் ஆண்டின் போது வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த நிர்மாண விடயத்திற்குரிய கோவைகளைச் சமர்ப்பிக்குமாறு 2023 ஆம் ஆண்டின் போது நீதி மன்றத்தினால் கட்டளையிடப்பட்டிருந்தும் அது காணாமல் போயுள்ளது என சபையினால் நீதிமன்றத்திற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. | கோவைகள் காணாமல் போனமை சம்பந்தமாக முறையான பரீட்சிப்பினை நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தெரிவிக்கிறேன். | அடிப்படை புலனாய்வு செய்யப்படுதல் வேண்டும். |

**3.3 வெளிப்படையான ஒழுங்கீனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் எரிபொருள் விலைப்பட்டியல்களைத் தீர்த்துவைக்கும் போது போலி ஆவணங்களைத் தயாரித்து 2023 மே மாதத்திலிருந்து 2024 சனவரி மாதம் வரையான காலத்தில் ரூபா 2,227,400 அளவிலான நிதி ஒழுங்கீனம் மேற்கொள்ளப்பட்டது எனவும் அதற்காக நியமிக்கப்பட்ட தொடக்க புலனாய்வு குழு அறிக்கை சமர்ப்பித்திருந்தது. உள்ளக வேலைப்பகிர்வு இல்லாமை இதற்கு காரணமாக இருந்தது. வவுச்சர்களுடனான எரிபொருள் கட்டளைகள் அனைத்தும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பது மிகவும் தெளிவாக இருந்த போதிலும் அந்த வவுச்சர்களை பரீட்சித்து சிபாரிசு செய்து அங்கீகரிக்கின்ற மற்றும் கொடுப்பனவுகளை சான்றுபடுத்துகின்ற உத்தியோகத்தர்கள் அது தொடர்பாக கவனயீனமாக நடவடிக்கை எடுத்திருந்தமை பிரச்சினைக்குரியதாகும். | இது தொடர்பாக தொடக்க புலனயர்வு மற்றும் பொலிஸ் விசேட குற்றப் புலனாய்வு பிரிவின் மூலம் பரீட்சிப்பு நடாத்தப்படுவதனால் அப்பரீட்சிப்பு அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நடவடிக்கைகள் எடுப்பேன். உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இது சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் முறையான உள்ளகக் கட்டுப்பாடு ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2006 ஆம் ஆண்டின் போது சபையினால் முறையற்ற வகையில் ஒரு தனியார் காணியினூடாக ஒரு வீதியினை நிர்மாணிப்பதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பாக முறைப்பாட்டாளருக்கு அக்காணியின் தெளிவான உரிமை மீண்டும் வழங்கப்பட்டிருந்ததுடன் இழப்பீட்டுப் பணம், வழக்கு கட்டணம், வழக்கறிஞர் கட்டணம் என்பனவாக ரூபா 479,505 தொகை 2022 ஆம் ஆண்டின் போது செலுத்துவதற்கு சபைக்கு தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது. வீதியை நிர்மாணிக்கும் போது கவனயீனமாக நடவடிக்கை எடுத்த தரப்பினர்களிடமிருந்து அப்பணத்தை அறவீடு செய்வதற்கு 2023 திசெம்பர் வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது நி.பி 104 இற்கு இணங்க பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கவனயீனமாக நடவடிக்கை எடுத்த தரப்பினர்களிடமிருந்து அப்பணத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

### 3.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் ஒரு தேயிலைக் காணியை அபிவிருத்தி செய்து நாற்று நடுவதற்கு ரூபா 732,000 செலவு செய்யப்பட்டிருந்தும் காணி முறையாக அபிவிருத்தி செய்யப்படவில்லை எனவும் தேயிலை நாற்றுக்கள் கைவிடப்பட்டிருந்தன எனவும் தேயிலை அபிவிருத்தி அதிகார சபையினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. | இக்காணி பல ஆண்டுகளாக வனாந்திரமாக காணப்பட்டது. அதில் காணப்பட்ட கற்கள் விழுந்து காணப்பட்டதுடன் அந்த அனைத்து குறைபாடுகளும் தற்பொழுது முடிவுறுத்தப்பட்டு இறுதிப்பட்டியல் செலுத்தப்பட்டுள்ளது. | செலவு செய்த பணத்திற்கு போதியளவு பிரதிபலன் கிடைத்தல் வேண்டும். |

### 3.6 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| வோவல்கெடிய விளையாட்டு மைதானத்தில் 2021 ஆம் ஆண்டின் போது 08 Green Light கள் பொருத்தப்பட்டிருந்தும் அவற்றில் பல்புகள் இல்லாதிருந்ததனால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 184,000 தொகை விளைவற்ற செலவாக இருந்தது. அந்த பல்புகள் காணாமல் போனமை சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறே உள்ளபடியான இயந்திர மணித்தியாலம் தொடர்பாக கவனம் செலுத்தாது வீதியை வெட்டுவதற்கு ரூபா 82,500 செலுத்தப்பட்டிருந்து. | பல்பு காணாமல் போனமை சம்பந்தமாக முறையான விசாரணைகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். அவ்வாறே விளையாட்டு மைதானத்தின் முன்பக்க பகுதியில் அணை வெட்டி அந்த மண்ணை கீழே கரைப் பக்கமாக எடுத்துச் சென்று பரப்பி மட்டப்படுத்தப்பட்டுள்ளது என தொழில்நுட்ப உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். | இச்சம்பவம் தொடர்பாக புலனாய்வு செய்யப்படுதல் வேண்டும். |

### 3.7 வாகன முறைமை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கம்பெக்டர் வாகனத்திற்காக 35,000 கிலோ மீற்றர் உத்தரவாத காலத்துடன் 06 டயர்கள் பொருத்தப்பட்டிருந்தும் 16,830 கிலோ மீற்றர்கள் ஓடியதன் பின்னர் அவை நீக்கப்பட்டிருந்தன. | டயர்களை கொள்வனவு செய்த நிறுவனத்திடமிருந்து இது தொடர்பாக விசாரித்து மேலதிக நடவடிக்கை எடுப்பேன். | பரீட்சிப்புக்களை நடாத்தி பொறுப்புக்கள் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டின் போது விபத்துக்குள்ளாகிய கம்பெக்டர் வாகனத்தை திருத்தம் செய்தல் வினைத்திறனற்றது என இயந்திர பொறியியலாளரினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் சாரதியின் அனுமதிப்பத்திரம் காலாவதியாகியிருந்ததனால் காப்புறுதி இழப்பீட்டினை வழங்குதல் | சாரதி அனுமதிப்பத்திரம் காலாவதியாகியுள்ளமை சம்பந்தமாக கவனத்தோடு இருந்து சாரதிகளுக்கு தெரியப்படுத்துவதற்கு விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. சேவை | பரீட்சிப்புக்களை நடாத்தி பொறுப்புக்களை நிர்ணயித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மறுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க இன்றுவரை செலுத்தப்பட்ட காப்புறுதி தவணைப் பணமும் விளைவற்ற செலவாக இருந்தது. இந்த வாகனம் ஒரு வெளி இடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன் அதன் திறப்பும் மேலதிக திறப்பும் சாரதியின் பொறுப்பில் காணப்பட்டன. மேலும் கழிவுப் பொருள் கட்டணத்தை சேகரிப்பதும் சாரதியினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் விபத்தோடு ரூபா 213,000 தொகையான 02 பற்றுச்சீட்டுப் புத்தகங்களும் காணாமல் போயுள்ளன. | முடிவடைந்ததன் பின்னர் அனைத்து வாகனங்களையும் சபை வளவில் நிறுத்திவைப்பதற்கும் திறப்புக்களை சபை அலுவலகத்தில் வைத்திருப்பதற்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் அச்செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். | |
| (இ) | ஓடமுடியாத நிலையில் காணப்படுகின்ற 08 வாகனங்களும் 04 உழவு இயந்திர பெட்டிகளும் கைதவிர்ப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த வாகனங்களை ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் ஏலத்தில் விற்கப்படவில்லை. மீண்டும் ஒரு குழுவினை நியமித்து கைதவிர்ப்புச் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சொத்துக்கள் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |